வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந,க.எண். 4934 / அ4 /அ3/ஆ2 /2023 நாள் : 30.11.2023

-----

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகராட்சி/உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி 2023 –2024 ஆம் ஆண்டிற்கான உடற்கல்வி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை –1, உடற்கல்வி இயக்குநர் நிலை – 2, பொதுமாறுதல் கலந்தாய்வு விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல், அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021
2.சென்னை–6,பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.25154/அ1/இ2/2021 நாள்.30.12.2021
3.அரசாணை (நிலை) எண்.12, பள்ளிக் கல்வி (பக5(1)துறை நாள்.03.02.2022
4. அரசாணை (நிலை) எண்.15.பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.10.02.2022
5.சென்னை–6,தமிழ்நாடு பள்ளிக் கல்வ இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.69185/எம்/இ3/2023 நாள்.28.11.2023

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகராட்சி/ உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் 2023 – 2024 ஆம் கல்வியாண்டிற்கும் மேற்காண் பார்வை –1 இல் காணும் அரசாணையின்படி உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர் நிலை –1, உடற்கல்வி இயக்குநர் நிலை –2 ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வினை கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதள வாயிலாக இணைப்பில் காணும் கால அட்டவணைப்படி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்துவகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இந்த கல்வியாண்டில் (2023–2024) ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்களை தற்போது பணிபுரியும் பள்ளியில் ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும் (Minimum one year service in present station) என்ற நிபந்தனையினை கடைபிடிக்கத் தேவையில்லை எனத் தெரிவிக்கலாகிறது.

<u>5)ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் முறை</u>

- ஒவ்வொரு ஆசிரியரும் மாறுதலுக்கான விண்ணப்பத்தினை விண்ணப்பிக்கும் போது EMIS இணையத்தில் தங்களுக்கான ஒதுக்கீடு

,

செய்யப்பட்ட ID –ஐ பயன்படுத்தி EMIS– இல் வெளியிடப்பட்டுள்ள மாறுதல் கோரும் படிவத்தில் உரிய விவரங்களை பதிவேற்றம் செய்திடல் வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் போது தங்கள் சார்பான விவரங்கள் ஏதேனும் தவறுதலாக இருப்பின் (பிறந்ததேதி,பணியில் சேர்ந்த நாள்,தங்கள் பெயர், பள்ளியின் பெயர் மற்றும் இதரவைகள்) அதிலிருந்து வெளியேறி தங்கள் பள்ளிக்கென உள்ள Login ID–யில் Teacher Profile சென்று, தவறாக உள்ள விவரங்களை சரிசெய்யப்பட்ட பின்னர், மீளவும் தங்களுடைய Individual Login IDஐக்கு சென்று அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்த பின்னர் Submit செய்திடல் வேண்டும்.

- ஆசிரியரின் மாறுதல் விண்ணப்பத்தினை பெற்ற பள்ளியின் தலைமை ஆசிரியர் பள்ளி Login IDஐ பயன்படுத்தி, மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியரின் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களை View செய்து, அனைத்தும் சரியான பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதி (பணிப்பதிவேட்டுடன் ஒப்பிடுதல்) செய்த பின்னர் முதல் கட்டமாக பள்ளித் தலைமை ஆசிரியர் Apporval செய்ய வேண்டும்.
- மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியர் Approval செய்யப்பட்ட பின்னர் அதனை மூன்று நகல்கள் எடுத்து ஒன்றினை சார்ந்த ஆசிரியருக்கு சார்பு செய்துவிட்டு மற்றொரு பிரதியினை சம்மந்தப்பட்ட வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் அந்தந்த பிரிவு எழுத்து அலுவலரிடம் நேரில் ஒப்படைத்திடல் வேண்டும்.
- மாறுதல் கோரும் விண்ணப்பத்தில் முன்னுரிமை (Priority) கோரி விண்ணப்பிக்கும் போது, அதற்கான உரிய அலுவலரால் அளிக்கப்பட்ட ஆதாரத்தை (ஆவண நகல்) இணையத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
- தற்போது பணிபுரியும் பள்ளியில் மாறுதல் பெற்ற வகை (ஏற்கனவே பெற்ற மாறுதல் ஆணை இணைக்கப்படல் வேண்டும்) i)விருப்ப மாறுதல் ii)மனமொத்த மாறுதல் iii)நேரடி நியமனம் iv)பதவி உயர்வு v)நிருவாக மாறுதல் vi)அலகு மாறுதல் vii)பணிநிரவல் இவற்றில் எந்த வகை என்பதை உரிய ஆதாரத்துடன் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்
- ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிகாரம் பெற்ற ஒப்புதல் (Approval) அளிக்கும் அலுவலரால் விவரங்கள் சரியாக இல்லை என நிராகரிக்கப்படுமாயின் (Rejected) அவ்விண்ணப்பத்தினை கூர்ந்தாய்வு செய்து சரியான தகவல்களுடன் மீளவும் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மேற்படி மாறுதல் கோரும் விண்ணப்பங்களை 30.11.2023 முதல் 05.12.2023 வரை இணையதளத்தில் பதிவேற்றம் மேற்கொள்ளலாம்.

**<u>பொதுவான அறிவுரைகள்</u>**

- கணவன் – மனைவி (Spouse Priority) முன்னுரிமையில் மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் அவரவர்கள் பணிபுரியும் அலுவலகம்/ பள்ளி அரசு மற்றும் அரசுத் துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ளதா என்ற விவரத்தினையும், உரிய அலுவலரிடம் (Competent authority) பெறப்பட்ட சான்றினையும் பதிவேற்றம் செய்திட வேண்டும். கணவன் – மனைவி பணிபுரியும் இடத்திற்கான தொலைவு 30கி.மீ மேல் உள்ளதை சரிபார்த்து உறுதி செய்யப்பட வேண்டும்.

- மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்கள், அவர்களின் முன்னுரிமையின் (Seniority Basis) அடிப்படையில், அவரது சுழற்சி (turn) வரும்பொழுது உள்ள காலிப்பணியிடத்தினை மட்டுமே தெரிவு செய்ய, ஒரே ஒரு முறை மட்டுமே அனுமதிக்கப்படுவர். அவருடைய முடிந்த பின்னர் ஏற்படும் Resultant Vacancyஐ தெரிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.
- மாவட்டம் விட்டு மாவட்டம் (Inter district transfer) கோரி விண்ணப்பித்துள்ள ஆசிரியர்கள் கலந்தாய்வின் போது தற்போது பணிபுரியும் மாவட்டத்தினை தவிர்த்து பிற மாவட்டத்தில் உள்ள காலிப்பணியிடத்திலேயே தெரிவு செய்யப்பட வேண்டும். (தனியரின் தற்போது பணிபுரியும் மாவட்டம் EMIS இணையத்தில் காண்பிக்கப்படமாட்டாது)
- மாறுதல் கலந்தாய்வுக்கு விண்ணப்பித்து கலந்தாய்வு நடைபெறும் அன்றைய நாளில் வருகைபுரியாமலோ (Absent & Late) வருகைபுரிந்தாலோ கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது
- மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களில் தவறுகள் ஏதும் பின்னர் கண்டறியப்படின் தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மேற்படி திருத்தங்கள்/முறையீடுகள் ஆகியனவை மேற்கொள்ளப்பட்டு இறுதி முன்னுரிமைப் பட்டியல் மற்றும் காலிப்பணியிடங்கள் (Final Seniority List & Vacancy List) வெளியிடப்பட்ட பிறகு திருத்தங்கள்/ முறையீடுகள் ஏதும் இருப்பின் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- கலந்தாய்வு –அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை –1, உடற்கல்வி இயக்குநர் நிலை –2 க்கான பொது மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) முதன்மைக் கல்வி அலுவலர்களின் EMIS LOGIN மூலமாக நடத்தப்படும்.

இணைப்பு.
2023 –2024 ஆம் கல்வியாண்டிற்கான
பொதுமாறுதல் கலந்தாய்வு அட்டவணை

// ஓம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்,
தலைமையாசிரியர்
அரசு/நகராட்சி/ உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.